சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

முன்னிலை: **திரு.M.மணிகண்டன், M.A., M.L., PG.D., C.F.Sc.,**

சார்பு நீதிபதி பொள்ளாச்சி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் நாள் செவ்வாய்கிழமை

(2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 26 ம் நாள்)

இடை மனு எண். 2/2024

–in–

அசல் வழக்கு எண். 210/2023

1. N.நடராஜ்
2. மஞ்சுளாதேவி ...மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

/எதிராக/

கலைச்செல்வி ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவானது, கடந்த 02.03.2026 ஆம் தேதியன்று இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றபோது, மனுதாரர்களுக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.S.P.காமாட்சிகுமார், பி.ஏ, பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.A.பிரபு, பி.ஏ., பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உ த் த ர வு

1) இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 11 மற்றும் பிரிவு 151 ன் கீழ் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.210/2023 வழக்கினை நீக்கரவு செய்து தக்க உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனு பிரமாண பத்திரிக்கையின் சாராம்சம்</u> :-

எதிர்மனுதாரர், மனுதாரரின் இளைய மகள் என்றும், எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் 1/3 பங்கு இருப்பதாகவும், எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் இருக்கும் 1/3 பங்கை பிரித்து தரக்கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா ஒன்றாவது அயிட்ட சொத்தும், வேறு சில சொத்துக்களும் 1ம் மனுதாரரின் தகப்பனாரான நாச்சிமுத்துக்கவுண்டர் தன் சொந்த உழைப்பால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு 18.02.1982ம் தேதியன்று கிரையம் பெற்று தனது தனிப்பட்ட சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்த சொத்து என்றும், 1ம் மனுதாரரின் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை கிரைய சொத்துக்களில் 1ம் மனுதாரருக்கும், அவரது சகோதர, சகோதரிகளுக்கு எந்த பங்கு பாத்தியமும் ஏற்படவில்லை என்றும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்தை 1ம் மனுதாரர் தன் சொந்த உழைப்பால் கிடைத்த வருமானத்தை வைத்து 14.11.2005ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின்படி பாத்தியப்பட்ட சொத்து என்றும், இந்நிலையில் கடந்த 18.02.1982ம் தேதியன்று கிரையம் பெற்ற சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் 1ம் மனுதாரரையும், அவரது சகோதரர்களான சிதம்பரசாமி, சின்னுச்சாமி, செல்வராஜ், சகோதரிகளான லீலாவதி, பாப்பாத்தி, சாந்தி, தாயார் கிட்டத்தாள் (எ) கிருஷ்ணம்மாள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு 04.09.2006ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) நாச்சிமுத்துகவுண்டரின் வாரிசுகள் 08.10.2007ம் தேதியன்று பாகப்பத்திரம் எழுதிக்கொண்டனர் என்றும், 1ம் மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட அவரது தனிப்பட்ட சொத்துக்கள் அவர் இறந்தபின் இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8ன்படி 1ம் மனுதாரருக்கும், அவரது சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும், தாயாருக்கும் பாத்தியப்பட்டது என்றால்

அதனை பாகம் செய்து கொண்டனர் என்றும், அதன்படி தாவா ஒன்றாவது அயிட்ட சொத்து 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்தினை 1ம் மனுதாரரின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது அவரது சொந்த உழைப்பில் கிடைத்த வருமானத்தை கொண்டு கிரையம் பெற்ற வகையில் 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்துக்களை 1ம் மனுதாரர் தனது மூத்த மகளான 2ம் மனுதாரருக்கு நிரந்தர பாத்தியம் ஏற்படுத்தி கொடுத்து 06.12.2013ம் தேதியன்று ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேற்படி விபரம் அனைவருக்கும் தெரியும் என்றும், செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பிறகு தாவா சொத்துக்கள் 2ம் மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும், அதில் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எவ்வித உரிமையும் பாத்தியமும் கிடையாது என்றும், தாவா சொத்துக்கள் 1ம் மனுதாரரின் தனி சொத்துக்கள் என்பதால் எதிர்மனுதாரருக்கும், 2ம் மனுதாரருக்கும் எந்த பங்கு பாத்தியமும் சட்டப்படி ஏற்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

2.3) எதிர்மனுதாரர் தனக்கு பாத்தியம் இருப்பதாக கூறி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படியும், வேறு எந்த சட்டப்படியும் பங்கு கிடையாது என்றும், தாவா சொத்துக்கள் 1ம் மனுதாரருக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்ட தனி சொத்துக்கள் என்பதால் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் பங்கு ஏற்படுவதற்கு எவ்வித வியாஜ்ஜிய மூலமும் ஏற்படவில்லை என்றும், தாவாவிற்கு எந்த வியாஜ்ஜிய மூலமும் இல்லை என்றும், எனவே வழக்குரையை நீக்கரவு செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சாராம்சம்</u>**

மனுவானது பொய்யானது என்றும், சட்டப்படி ஒத்துக்கொண்ட பொருண்மைகளை தவிர இதர பொருண்மைகளை மனுதாரர்கள் தான் மெய்பிக்க வேண்டும் என்றும், தாவா சொத்தின் தன்மையை கூட்டுக்குடும்ப சொத்தா ? அல்லது தனிப்பட்ட சொத்தா ? என்பது பற்றியதாகும் என்றும், அதனை சாட்சிகள் மூலமாகவே நிரூபிக்க முடியும் என்றும், காலம் கடத்தும் நோக்கத்திலேயே மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், அசல் வழக்கின் நடவடிக்கைகளை இழுத்தடிப்பதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி, இம்மனு அனுமதித்து உத்தரவிட வேண்டுமா? என்பதாகும்.

5) இந்த மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்களாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் 1/3 பங்கு இருப்பதாகவும், அதனை பிரித்து தரக்கோரி அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா ஒன்றாவது அயிட்ட சொத்தும், வேறு சில சொத்துக்களும் 1ம் மனுதாரரின் தகப்பனாரான நாச்சிமுத்துக்கவுண்டர் தன் சொந்த உழைப்பால் கிடைத்த வருமானத்தைக் கொண்டு 18.02.1982ம் தேதியன்று கிரையம் பெற்று தனது தனிப்பட்ட சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்த சொத்து என்றும், 1ம் மனுதாரரின் தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை கிரைய சொத்துக்களில் 1ம் மனுதாரருக்கும், அவரது சகோதர, சகோதரிகளுக்கு எந்த பங்கு பாத்தியமும்

ஏற்படவில்லை என்றும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்தை 1ம் மனுதாரர் தன் சொந்த உழைப்பால் கிடைத்த வருமானத்தை வைத்து 14.11.2005ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின்படி பாத்தியப்பட்ட சொத்து என்றும், இந்நிலையில் கடந்த 18.02.1982ம் தேதியன்று கிரையம் பெற்ற சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் 1ம் மனுதாரரையும், அவரது சகோதரர்களான சிதம்பரசாமி, சின்னுச்சாமி, செல்வராஜ், சகோதரிகளான லீலாவதி, பாப்பாத்தி, சாந்தி, தாயார் கிட்டத்தாள் (எ) கிருஷ்ணம்மாள் ஆகியோர்களை வாரிசுகளாக விட்டுவிட்டு 04.09.2006ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், நாச்சிமுத்துகவுண்டரின் வாரிசுகள் 08.10.2007ம் தேதியன்று பாகப்பத்திரம் எழுதிக்கொண்டனர் என்றும், 1ம் மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட அவரது தனிப்பட்ட சொத்துக்கள் அவர் இறந்தபின் இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8ன்படி 1ம் மனுதாரருக்கும், அவரது சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும், தாயாருக்கும் பாத்தியப்பட்டது என்றால் அதனை பாகம் செய்து கொண்டனர் என்றும், அதன்படி தாவா ஒன்றாவது அயிட்ட சொத்து 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்தினை 1ம் மனுதாரரின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது அவரது சொந்த உழைப்பில் கிடைத்த வருமானத்தை கொண்டு கிரையம் பெற்ற வகையில் 1ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்துக்களை 1ம் மனுதாரர் தனது மூத்த மகளான 2ம் மனுதாரருக்கு நிரந்தர பாத்தியம் ஏற்படுத்தி கொடுத்து 06.12.2013ம் தேதியன்று ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், மேற்படி விபரம் அனைவருக்கும் தெரியும் என்றும், செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பிறகு தாவா சொத்துக்கள் 2ம் மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும், அதில் 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எவ்வித உரிமையும் பாத்தியமும் கிடையாது என்றும், தாவா

சொத்துக்கள் 1ம் மனுதாரரின் தனி சொத்துக்கள் என்பதால் எதிர்மனுதாரருக்கும், 2ம் மனுதாரருக்கும் எந்த பங்கு பாத்தியமும் சட்டப்படி ஏற்படவில்லை என்றும், எதிர்மனுதாரர் தனக்கு பாத்தியம் இருப்பதாக கூறி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படியும், வேறு எந்த சட்டப்படியும் பங்கு கிடையாது என்றும், தாவா சொத்துக்கள் 1ம் மனுதாரருக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்ட தனி சொத்துக்கள் என்பதால் எதிர்மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் பங்கு ஏற்படுவதற்கு எவ்வித வியாஜ்ஜிய மூலமும் ஏற்படவில்லை என்றும், தாவாவிற்கு எந்த வியாஜ்ஜிய மூலமும் இல்லை என்றும், எனவே வழக்குரையை நீக்கரவு செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

6) அதற்கு எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்து மனுவில் கண்ட சங்கதிகளை முற்றிலும் மறுத்தும் தாவா சொத்தின் தன்மை கூட்டுக்குடும்ப சொத்தா ? அல்லது தனிப்பட்ட சொத்தா ? என்பது பற்றியதாகும் என்றும், அதனை சாட்சிகள் மூலமாகவே நிரூபிக்க முடியும் என்றும், மனுதாரர்கள் தாவாவிற்கு வழக்குமூலம் இல்லை என்ற காரணத்திற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், காலம் கடத்தும் நோக்கத்திலேயே மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், அதனால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

7) மனு, எதிருரை, வழக்குரை மற்றும் மனுவில் கண்ட சான்றவாணங்களை இந்த நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்யும்போது அசல் வழக்கின் 1ம் பிரதிவாதி, வாதியின் தந்தை என்றும், 2ம் பிரதிவாதி உடன்பிறந்த சகோதரி என்றும், தாவா ஒன்றாவது அயிட்ட சொத்து மற்றும் வேறு சொத்துக்கள் ஆதியில் நாச்சிமுத்துக்கவுண்டருக்கு 18.02.1982ம் தேதியிட்ட கிரைய

பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்றும், மேலும் அவர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஆயுட்காலம் வரை அனுபவம் செய்து வந்தார் என்றும், பின்னிட்டு வாதியின் தாத்தாவான நாச்சிமுத்துக்கவுண்டர் 04.09.2006 ம் தேதியன்று தாவா ஒன்றாவது அயிட்ட சொத்தைப் பொறுத்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றும், நாச்சிமுத்து கவுண்டர் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளான 8 நபர்கள் தாவா ஒன்றாவது அயிட்ட சொத்து மற்றும் இன்னும் பிற சொத்துக்களை பொதுகுடும்ப சொத்துக்களாக பாவித்து 09.10.2007 ம் தேதியன்று பாகம் பிரித்துக்கொண்டனர் என்றும், தாவா இரண்டாவது அயிட்ட சொத்தை 14.11.2005 ம் தேதியன்று தாவா ஒன்றாவது அயிட்ட சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தை வைத்து வாதியின் தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார் என்றும், தாவா சொத்துக்கள் பொதுக்குடும்ப சொத்துக்கள் என்றும், அதனால் வாதிக்கு பாகம் உள்ளது என கூறி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

8) இந்த நிலையில் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களை இந்த நீதிமன்றம் பரிசீலனை செய்யும்போது ம.சா.ஆ.1 ஆக 18.02.1982 ம் தேதியிட்ட கிரைய ஆவணமும், ம.சா.ஆ.2 ஆக 14.11.2005 ம் தேதியிட்ட கிரைய ஆவணமும், ம.சா.ஆ.3 ஆக 08.10.2007 ம் தேதியிட்ட பாகசாசனமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. வழக்காவணங்களை பரிசீலனை செய்த வகையில் தாவா சொத்துக்கள் பொதுக்குடும்ப சொத்துக்களா ? தனிப்பட்ட சொத்துக்களா ? என்று பார்க்கும்போது தாவா ஒன்றாவது அயிட்ட சொத்தானது நாச்சிமுத்து கவுண்டர் 18.02.1982 ம் தேதியன்று கிரையம் வாங்கிய சொத்து என்பது தெரியவருகிறது. மேலும் தாவா இரண்டாவது அயிட்ட சொத்து மனுதாரரின் சுயசம்பாத்திய சொத்து என்பது தெரியவருகிறது. தாவா ஒன்றாவது அயிட்ட சொத்தை 09.10.2007 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட பாகசாசனம் மூலம் பிரித்து கொண்டனர் என்பது இந்த

மனுவில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் மூலமாக தெரியவருகிறது. மேலும் அந்த பாகசாசனப்படி தாவா ஒன்றாவது அயிட்ட சொத்து இம்மனுவில் கண்ட 1ம் மனுதாரரான 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

9) மேலும் 1ம் பிரதிவாதியான இந்த வழக்கில் கண்ட 1ம் மனுதாரர் உயிருடன் இருக்கும் வரை அவரது வாரிசுகளுக்கு பாகம் பிரிந்து செல்லாது என்பது தெளிவான சங்கதியாகும் அது இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8–ல் தெளிவாக கூறப்பட்டுள்ளது. மேலும் தாவா இரண்டாவது அயிட்ட சொத்து தாவா ஒன்றாவது அயிட்ட சொத்திலிருந்து கிடைத்த வருமானத்திலிருந்து பெறப்பட்ட சொத்து என்று கூறும் நிலையில் அதனை எதிர்மனுதாரர் தரப்பில் எந்த இடத்திலும் எடுத்துக்காட்டவில்லை. தாவா இரண்டாவது அயிட்ட சொத்து 1ம் மனுதாரரின் பெயரில் உள்ளது என்பது தெளிவாக தெரியவருகிறது. இந்த நிலையில் இந்த நீதிமன்றம் இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8–ஐ பரிசீலனை செய்யும்போது

**8. General rules of succession in the case of males** – The property of a male Hindu dying intestate shall devolve according to the provisions of this chapter -

(a) firstly, upon the heirs, being the relatives specified in class I of the Schedule;

(b) secondly, if there is no heir of class I, then upon the heirs, being the relatives specified in class II of the Schedule ;

(c) thirdly, if there is no heir of nay of the two classes, then upon the agnates of the deceased ; and

(d) lastly, if there is no agnate, then upon the cognates of the deceased என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன்தீர்ப்புகளை பரிசீலனை செய்யும்போது **2023-1-L.W. 677 D.T.Rajkappoor**

**Sah @ Raghul Sah (Died) and others Vs Kamakshi Bai and others** என்று முன்தீர்ப்பில்

**Hindu Law – Hindu Succession (amendment) act (2005), Sections 6, 8**

Patition /Coparcenary, separate property, registered partition deed, effect of

property inherited by a male Hindu from his father, father's father or father's father's father is an ancestral property – share which a coparcener obtains on partition of ancestral property – share which a coparcener obtains on partition of ancestral property is an ancestral property as regards his male issue – After partition, property in the hands of the son will continue to be the ancestral property and the natural or adopted son of that son will take interest in it and is entitled to it by suit property is undivided Hindu joint family property of TS and plaintiffs and the defendants, his children.

ES (father of TS) along with his sons started business and out of the income of the joint business and out of the income of the joint business, they purchased three items of properties which included the suit property and the properties are divided by the registered deed of partition – suit property cannot be per se categorised as ancestral property என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்யும்போது சொத்தானது பாகம் பிரிக்கப்பட்டு அது மனுதாரருக்கு ஒதுக்கப்படும்போது அது தனிப்பட்ட சொத்தாக தான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் **AIR 2019 SIKKIM 28 Chingtop Bhutia Vs Ran Bahadur Chettri and others** என்ற முன்தீர்ப்பில் Rejection of Plaint – Absence of cause of action – Finding that plaint cannot be rejected for not revealing cause of action, erroneous – Plaint liable to be rejected for lack of cause of action என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் **AIR 2008 Supreme Court 3174 Kamala and others Vs K.T.Eshwara Sa and others** என்ற முன்தீர்ப்பில் Civil P.C. (5 of 1908), O. 7 R. 11(d) – Rejection of plaint – R. 11 (d) of O. 7 has limited application – Conclusion that suit is barred under any Law must be drawn from averments made in plaint என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

10) மேற்கண்ட முன்தீர்ப்புகளை பரிசீலனை செய்யும்போது இந்த வழக்கில் கண்ட ஒன்றாவது அயிட்ட சொத்து 1ம் மனுதாரருக்கு பாகப்பிரிவினை மூலம் ஒதுக்கப்படடுள்ள நிலையில் அது அவருடைய தனிப்பட்ட சொத்தாக தான் எடுத்துக்கொள்ளவேண்டும். இரண்டாவது அயிட்ட சொத்து 1ம் மனுதாரால் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்டுள்ள நிலையில் அது 1ம் மனுதாரரின் தனியப்பட்ட சொத்தாக தான் எடுத்துக்கொள்ளவேண்டும். மேலும் பிரிவு 8 இந்து வாரிசுரிமை சட்டத்தை பரிசீலனை செய்யும்போது 1ம் மனுதாரர் தற்போது உயிருடன் இருக்கும்போது எதிர்மனுதாரர் / வாதி எந்த பாகமும் கோரஇயலாது என்று பிரிவு 8 இந்து வாரிசுரிமை சட்டத்தில் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் மனுதாரர்கள் தரப்பில் கூறியவாறு வழக்கு தொடர வழக்குமூலம் எழவில்லை என்றும், அதனால் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7 விதி 11(a)ன் கீழ் **Plaint does not disclose cause of action** என்று கூறப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் எதிர்மனுதாரர் / வாதி தரப்பில் வழக்குமூலத்தை பொறுத்து தெரிவிக்காத நிலையில் இந்த வழக்கிற்கு வழக்குமூலம் எழவில்லை என்ற நிலையில் மேற்கண்ட முன்தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு மிகவும் பொருந்துவதாக உள்ளது என்ற நிலையில் வழக்குரையை நீக்கரவு (Plaint is rejected) செய்யலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**முடிவாக** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் வருடம் மார்ச் மாதம் 10 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.11 10:00:46 +0530

**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி**

இரு தரப்பு சாட்சி : இல்லை

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 18.02.1982 | கிரைய சாசனம் நகல் |
| ம.சா.ஆ.2 | 14.11.2005 | கிரைய சாசனம் நகல் |
| ம.சா.ஆ.3 | 08.10.2007 | பாகசாசனம் நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.11 10:00:51 +0530

**சார்பு நீதிபதி, பொள்ளாச்சி**

<u>வரைவு / சீரான உத்தரவு</u>

I.A.No.02/2024

OS No.210/2023

சார்பு நீதிமன்றம்,

பொள்ளாச்சி